# செந்தமிழ்

தொகுதி : 96 திருவள்ளுவர் ஆண்டு 2033 மார்ச்சு 2002 பகுதி : 3

திங்கள் இதழ்

மதிப்புறு ஆசிரியர் இரா. அழகுமலை எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

## தமிழ்ச் சங்க ஆட்சிக் குழு

| | |
|---|---|
| முகவை மன்னர் திரு.நா. குமரன் சேதுபதி | தலைவர் |
| திரு. எம்.பி.ஆர். மலையாண்டி என்ற அசோக் | துணைத்தலைவர் |
| திரு. இரா. அழகுமலை | செயலாளர் |
| திருமதி. இராணி இலட்சுமி நாச்சியார் | உறுப்பினர் |
| திரு. மா. சங்கர பாண்டியன் | உறுப்பினர் |
| திரு. டாக்டர். ந. சேதுராமன் | உறுப்பினர் |
| திரு. கே. கந்தசாமி | உறுப்பினர் |
| திரு. வெ. பழனிச்சாமித்தேவர் | உறுப்பினர் |
| திரு. வே. திருவரங்கராசன் | உறுப்பினர் |
| திரு. க.சி. அகமுடைநம்பி | உறுப்பினர் |
| திரு. ச. பரங்குன்றம் | உறுப்பினர் |
| திரு. அ. சாமிஐயா | உறுப்பினர் |

## செந்தமிழ் ஆசிரியர் குழு

பேரறிஞர். நா. பாலுசாமி
பேரறிஞர். தமிழண்ணல்
பேரறிஞர். செ. கந்தசாமி
டாக்டர். ந. சேதுராமன்
பேரறிஞர். ம.ரா.போ. குருசாமி
பேரறிஞர். கதிர். மகாதேவன்
பேரறிஞர். அ.அ. மணவாளன்
பெரும் புலவர். இரா. இளங்குமரன்
பேரறிஞர். அ. தட்சிணாமூர்த்தி
பேரறிஞர். ந. வாசுகிராஜா
பேரறிஞர். ஈ.கி. இராமசாமி
பேரறிஞர். சே. அரிராமநாதன்
திரு. வே. திருவரங்கராசன்

# செந்தமிழ்

திங்கள் இதழ்

| இதழ் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக்கட்டணம் | ரூ. 60 | ரூ. 600 |
| வாணாள் கட்டணம் | ரூ. 500 | ரூ. 2000 |
| புரவலர் கட்டணம் | ரூ. 1000 | ரூ. 2000 |
| தனி இதழ் கட்டணம் | ரூ. 6 | |

மதிப்புறு ஆசிரியர் :

**இரா. அழகுமலை** எம்.ஏ.,எம்.ஃபில்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

# பொருளடக்கம்

1. எல்லோருக்கும் தொல்காப்பியம் ... 77

பேரறிஞர் நா.பாலுசாமி.

2. கண்ணகியின் தமிழறிவு ... 87

பேரறிஞர் ந. சுப்ரமணியன்.

3. கல்விப் பயிற்சிக்குரியது தாய்மொழி ... 89

தி. இராதாகிருஷ்ணபிள்ளை.

4. வாழ்வின் அடித்தளம் தொடக்கக் கல்வியே! ... 99

சு.கு.பன்னீர் செல்வம்.

5. ஷேக்ஸ்பியரின் சில துன்பியல் நாடகங்களில் வள்ளுவரின் அறநெறிக் கருத்துக்கள். ... 106

பா. சூரியநாராயணன்.

# எல்லோருக்கும் தொல்காப்பியம்

*பேரறிஞர்.நா.பாலுசாமி.*
முன்இதழ்த் தொடர்ச்சி

(எழுத்து-புணரியல்)

குறிப்பு: ஒரு சொல் மற்றொரு சொல்லோடு சேர்வதை சொற் புணர்ச்சி என்கிறோம். சொற்கள் ஒன்றோடு ஒன்று புணர்ந்தாலும் நிற்கின்ற சொல்லின் ஈற்றெழுத்தும், வந்து சேரும் சொல்லின் முதலெழுத்தும் புணர்வதைத்தான் சொற்புணர்ச்சி என்கிறோம். உண்மையில் இஃது எழுத்துப் புணர்ச்சியே ஆகும்.

சூத். 103

மூன்று தலையிட்ட முப்பதிற்று எழுத்தின்
இரண்டு தலையிட்ட முதலாகு இருபஃது
அறுநான்கு ஈற்றொடு நெறி நின்று இயலும்
எல்லா மொழிக்கும் இறுதியும் முதலும்
மெய்யே உயிர் என்று ஆயீர் இயல.

(ப.ரை)

மூன்று தலையிட்ட-மூன்றினை முடிவிலே பெற்ற, முப்பதிற்று எழுத்தின் - முப்பது எழுத்துக்களும், இரண்டு தலையிட்ட - இரண்டினை முடிவிலே கொண்ட, முதல் ஆகு - சொல்லுக்கு முதலிலே நிற்கும், இரு பஃது - இருபது எழுத்துக்களும், அறுநான்கு ஈற்றொடு - ஈற்றில் நிற்கும் இருபத்து நான்கு எழுத்துக்களோடு, நெறிநின்று இயலும் - முறையாக இயங்கும், எல்லா மொழிக்கும்- எல்லா வகையான சொற்களுக்கும், இறுதியும் முதலும் - ஈற்றிலும் முதலிலும் நிற்பன, மெய் உயிர் என்று - மெய்யும் உயிரும் என்ற, அ ஈர் இயல - அவ்விரண்டு ஈறுகளை உடையன.

சொல்லுக்கு முதலில் வரும் இருபத்து இரண்டு எழுத்துக்களும், ஈற்றில் வரும் இருபத்து நான்கு எழுத்துக்களும் ஆகிய இவை புணரும்போது மெய்யாகவும், உயிராகவும் இரு வகையிலும் புணரும். இவ்வெழுத்துக்கள் தமிழில் வழங்கும் உயிரும், உடம்புமாகிய முப்பது எழுத்துக்களுள் அடங்கும்.

(வி.ரை)

உயிரெழுத்து பன்னிரண்டும், மெய்யெழுத்து பதினெட்டும் ஆகிய முப்பது எழுத்துக்களே தமிழ் மொழியில் வழங்கும் எழுத்துக்கள். உயிரெழுத்து பன்னிரெண்டும், மெய்யெழுத்து ஒன்பதும், மொழிமுதற் குற்றியலுகரம் ஒன்றும் ஆகிய இருபத்து இரண்டும், மொழிக்கு முதலில் வரும் எழுத்துக்கள். இங்கு மெய்யெழுத்து என்பது உயிர்மெய் யெழுத்துக்கள். தனி மெய்யெழுத்து சொல்லுக்கு முதலில் வாராது. உயிரெழுத்து பன்னிரெண்டும் மெய்யெழுத்து பதினொன்றும், குற்றியலுகரம் ஒன்றும் ஆகிய இருபத்து நான்கு எழுத்துக்களும் சொல்லின் ஈற்றில் நிற்பனவாம். மெய்யெழுத்துக்களுள் வல்லினம் ஆறும் மெல்லெழுத்துள் 'ங'வும் மொழிக்கு ஈற்றில் நிற்க மாட்டா

இவ்வெழுத்துக்கள் புணரும் போது மெய்யும் மெய்யும். உயிரும் உயிரும், உயிரும் மெய்யும், மெய்யும் உயிருமாகப் புணரும்.

7(எ.டு)

மரம் - மெய்யும் மெய்யும் புணர்ந்தன
இலை - உயிரும் உயிரும் புணர்ந்தன
ஆல் - உயிரும் மெய்யும் புணர்ந்தன
பல - மெய்யும் உயிரும் புணர்ந்தன

(சூத்-104)

அவற்றுள்,

மெய்யீறு எல்லாம் புள்ளியொடு நிலையல்.

மேலே கூறப்பட்ட உயிரும், மெய்யுமாகிய இரண்டனுள், சொல்லுக்கு ஈற்றிலே நிற்கும் மெய்யெழுத்துக்கள் எல்லாம் புள்ளி பெற்றே வரும். இனி பொதுவாக எல்லா மெய்யெழுத்துக்களும் புள்ளிபெறும் என்பதும் இதன் பொருளாகும். சொல்லுக்கு முதலில் வரும் மெய்யை உயிர்மெய்யாகவே கொள்ள வேண்டும். தனி மெய் சொல்லுக்கு முதலில் வாராது.

(சூத் - 105)

குற்றியலுகரமும் அற்றுஎன மொழிப

சொல்லுக்கு ஈற்றில் வல்லின மெய்யின்மேல் ஏறி வரும் குற்றியலுகரமும் மேலே கூறிய மெய்யெழுத்துப் போன்றே புள்ளி பெற்று வரும்.

(எ.டு)

கட்டு

இக்காலத்தில் குற்றியலுகரம் புள்ளி பெறுவது இல்லை. உச்சரிப்பால் இனம் கண்டுகொள்ள வேண்டும்.

அற்று என - அவ்வாறே; (மெய்யெழுத்துக்கள் போல)

(சூத் - 106)

உயிர் மெய் ஈறும் உயிர்ஈறு இயற்றே.

சொல்லுக்கு ஈற்றில் வரும் உயிர்மெய் எழுத்தும், உயிரெழுத்தின் தன்மையைப் பெறும்.

(எ.டு) பல, நிலா - இவற்றின் ஈற்றில் உள்ள உயிர்மெய் எழுத்து அகர ஒலியையே ஈற்றில் பெற்று இருக்கும் (ல்+அ=ல). இடையில் வரும் உயிர்மெய்யும் உயிர்த்தன்மை உடையதே.

(எ.டு)

வரகு (ர்+அ=ர)

இவ்வாறு ஈற்றிலும், இடையிலும் வரும் உயிர்மெய்,

உயிரெழுத்தின் இயல்பினைப் பெறுவன. எனவே, முதலில் வரும் மெய் எழுத்து உயிர்மெய் எழுத்தே.

(சூத்-107)

உயிர் இறு சொல் முன் உயிர் வரு வழியும்
உயிர் இறு சொல் முன் மெய் வரு வழியும்
மெய் இறு சொல் முன் உயிர் வரு வழியும்
மெய் இறு சொல் முன் மெய் வரு வழியும் என்று
இவ் என அறியக் கிளக்கும் காலை
நிறுத்த சொல்லே குறித்து வரு கிளவி என்று
ஆயீர் இயல புணர்நிலைச் சுட்டே .

(ப.உரை)

புணர்நிலைச் சுட்டு - சொற்புணர்ச்சி எனக் குறிக்கப்படுவன, இவ் என அறியக் கிளக்கும் காலை - இவை என அறியுமாறு விளக்கிக் கூறும் இடத்து, உயிர் இறு சொல் முன் - உயிர் ஈற்றுச் சொல்முன், உயிர் வரு வழியும் - உயிரெழுத்தை முதலில் பெற்று வரும் மொழி வரும் போதும், உயிர் இறுசொல் முன் - உயிர் ஈற்றுச் சொல்முன், மெய் வரு வழியும் - உயிர் மெய்யை முதலில் பெற்று வரும் போதும், மெய் இறு சொல்முன் - மெய் ஈற்றுச் சொல் முன், உயிர் வரு வழியும் - உயிரெழுத்தை முதலில் பெற்று வரும் போதும், மெய் இறு சொல் முன் - மெய் ஈற்றுச் சொல் முன், மெய் வரு வழியும் - உயிர் மெய்யை முதலில் பெற்று வரும் போதும், நிறுத்த சொல் - முதலில் நிற்கும் சொல்லும், குறித்து வரு கிளவி - வந்து புணரும் வருமொழியும் என்று கூறப்படும், அ ஈர் இயல - அவ்விரண்டு இயல்புகளை உடையவாம்.

புணர்ச்சி என்பது நின்ற சொல்லின் ஈற்றெழுத்தும், வரும் சொல்லின் முதல் எழுத்தும் இயைவதாகும். இவ்வாறு எழுத்துக்கள் புணர்ந்தாலும் அவற்றை உடைய சொற்கள் புணர்வதைத்தான் புணரியல் கூறுகிறது. நிறுத்த சொல் -

நிலைமொழி, குறித்து வருகிளவி - வருமொழி. நிலைமொழியும், வருமொழியும் புணர்வதே புணர்ச்சி. சொற் புணர்ச்சிக்கு இரண்டு சொற்கள் வேண்டும். இப்புணர்ச்சி நால்வகைப்படும் என்கிறார் தொல்காப்பியர்.

1. உயிரீற்றின் முன் உயிர் - ஆ+உண்டு(ஆவுண்டு)
2. உயிரீற்றின் முன் மெய் - ஆ+படுத்தது (ஆபடுத்தது)
3. மெய்யீற்றின் முன் உயிர் - ஆல்+இலை(ஆலிலை)
4. மெய்யீற்றின் முன் மெய் - ஆல்+வீழ்ந்தது(ஆல்வீழ்ந்தது)

(சூத்-108)

அவற்றுள்,
நிறுத்த சொல்லின் ஈறாகு எழுத்தொடு
குறித்து வரு கிளவி முதல் எழுத்து இயையப்
பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்
பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு தொழிலைப் புணர்க்குங்காலும்
மூன்றே திரிபு இடன், ஒன்றே இயல்பு என
ஆங்கு அந்நான்கே மொழி புணர் இயல்பே.

(ப.உரை)

அவற்றுள் - நிலைமொழி, வருமொழி என்றவற்றுள், நிறுத்த சொல்லின் - நிலை மொழியின், ஈறு ஆகு எழுத்தொடு - ஈற்றில் நிற்கும் எழுத்தோடு, குறித்து வரு கிளவி - வருமொழியின் முதல் எழுத்து பொருந்த, பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும் - பெயர்ச் சொல்லோடு பெயர்ச் சொல்லைச் சேர்க்கும் இடத்தும், பெயரொடு தொழிலைப் புணர்க்குங்காலும் - பெயர்ச்சொல்லோடு வினைச் சொல்லைச் சேர்க்கும் இடத்தும், தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும் - வினைச் சொல்லோடு பெயச்சொல்லைச் சேர்க்கும் இடத்தும்,

தொழிலோடு தொழிலைப் புணர்க்குங்காலும் - வினைச் சொல்லோடு வினைச்சொல்லைச் சேர்க்கும் இடத்தும், மூன்று திரிபு - திரிபுகள் மூன்று, ஒன்று இயல்பு - இயல்பு ஒன்று, என - என்று, புணர் மொழி இயல்பு - மொழிகள் தம்மோடு சேரும் இலக்கணம், அ நான்கே - அந்த நான்குமே ஆகும்.

முன் சூத்திரத்தில் எழுத்துக்கள் புணரும் வகை நான்கு கூறப்பட்டது. இச் சூத்திரத்தில் சொற்கள் நான்கு வகையாகப், புணரும் விதம் விளக்கப்படுகிறது. தமிழ் இலக்கணத்தில் முதன்மையாகக் கூறப்படும் சொற்கள் பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லுமே. இங்கு, தொழில் என்று கூறப்படுவது வினைச்சொல்லே என்று அறிக.

(எ.டு)

கோவிந்தன் கண் - பெயரொடு பெயர் புணர்தல்
கோவிந்தன் உண்டான் - பெயரொடு தொழில் (வினை)
உண்டான் கோவிந்தன் - தொழிலொடு பெயர்,
கண்டனன் வந்தான் - தொழிலொடு தொழில் .

திரிபு - விகாரம், மாறுபாடு. இத்திரிபு மூவகைப்படும். பின் வரும் சூத்திரம் இதனை விளக்கும். திரிபு இன்றி இயல்பாகச் சொற்கள் புணருமானால், அதனை இயல்புப் புணர்ச்சி என்பர். விளக்கம் பின் வரும் சூத்திரத்தில் காண்போம்.

சூத் - 109

அவைதாம்,
மெய் பிறிது ஆதல் மிகுதல் குன்றல் என்று
இவ்வென மொழிப திரியு மாறே

(ப.ரை)

அவைதாம் - முற் கூறிய மூவகைத் திரிபுகள், மெய் பிறிது ஆதல் - ஒரு மெய் எழுத்து பிறிதொரு மெய்யாகத் திரிதல், மிகுதல் - இடையில் ஒரு மெய் எழுத்துத் தோன்றுதல்,

குன்றல் - ஒரு மெய் எழுத்துக் கெடுதல், என்று-என்று, திரியும் ஆறு - எழுத்துத் திரியும் முறை, இ என மொழிப- இம்மூவகைப்படும் எனக் கூறுவர் ஆசிரியர்.

புணர்ச்சி விகாரம் மூன்று. அவை திரிதல், கெடுதல், தோன்றுதல் என்பனவாம். சொற்கள் இம்மூவகையிலும் புணரும்.
(எ.டு)

மண் + குடம் = மட்குடம்-ண், ட் ஆகத் திரிந்தது
(மெய் பிறிது ஆதல்)
பூ + கொடி = பூங்கொடி - 'ங்' மிக்கது
(தோன்றல் விகாரம்)
மரம் + வேர் = மரவேர் - 'ம்' குன்றியது.
(கெடுதல் விகாரம்)
மண் + மலை = மண்மலை (இயல்புப் புணர்ச்சி)
(இது மூவகைத் திரிபுமின்றி
இயல்பாகப் புணர்ந்தது)

சூத். 110.

நிறுத்த சொல்லும் குறித்துவரு கிளவியும்
அடையொடு தோன்றினும் புணர்நிலைக்கு உரிய

(ப.ரை)

நிறுத்த சொல்லும் - நிற்கும் சொல்லாகிய நிலைமொழியும், குறித்து வரு கிளவியும் - அதனோடு பொருந்த வருகின்ற வரு மொழியும் ஆகிய இரண்டும், அடையொடு தோன்றினும் - அடைமொழிகளோடு வந்தாலும், புணர்நிலைக்கு உரிய - மேற்சொன்னவாறே புணரும் இயல்பினை உடையன.

தனிச் சொற்களே அன்றி அடையோடு கூடிய தொடர்ச் சொற்களாயினும் அவையும் தனிச்சொற்கள் புணருமாறே புணரும்.
(எ.டு)

பதினாயிரத்தொன்று.

பதினாயிரம் என்பது பத்து+ஆயிரம் என அடை அடுத்து வந்தது. இன் - சாரியை.

(சூத். 111)

மருவின் தொகுதி மயங்கியல் மொழியும்
உரியவை உளவே புணர்நிலைச் சுட்டே

(ப.உரை)

மருவின் தொகுதி - மருவி வரும் இயல்புகளோடுகூடிய, மயங்கியல் மொழியும் - மாறிவரும் இயல்பினை உடைய சொற்களும், புணர்நிலைச் சுட்டு - புணர்ச்சி குறித்து வரும்போது, உரியவை உள - இலக்கணச் சொற்களைப்போலவே உரிமை உடையன.

சொல் இயற்சொல் என்றும், பேச்சு வழக்கில் மருவி வழங்கும் மரூஉச்சொல் என்றும் இரு வகைப்படும். முற்றம், சேரி முதலியன இயல்பான சொற்கள். இல்+முன் = இல்முன் இது இலக்கணச்சொல். இது முன்பின் மாறி முன்+இல் = முன்றில் என வருவது மரூஉச் சொல் ஆகும். பேச்சு வழக்கில் நாளடைவில் மருவி வந்து நிலைபெற்றது. அருமை+மருந்து+அன்ன+பிள்ளை = அருமருந்தன்னபிள்ளை என வருவது இலக்கணம். இது நாளடைவில் மக்கள் வழக்கில் மருவி (சிதைந்து) 'அருமந்த பிள்ளை' என வழங்குகிறது. 'கும்பகோணம்', 'குடந்தை' என வழங்குவதும் மருவிய சொல்லாகும். இது இலக்கணமன்று என்றாலும் நிலைபெற்று விட்டபடியால் இலக்கணமாகவே கொள்க என்பதாம். இதனை இலக்கணப்போலி என்பாரும் உளர்.

(சூத்.112)

வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும்
வேற்றுமை அல்வழிப் புணர்மொழி நிலையும்

எழுத்தே சாரியை ஆயிரு பண்பின்
ஒழுக்கல் வலிய புணரும் காலை.

(ப.உரை)

வேற்றுமை குறித்த புணர்மொழி நிலையும் - வேற்றுமைப் புணர்ச்சியும், வேற்றுமை அல்வழிப்புணர்மொழி நிலையும் - வேற்றுமை அல்லாது புணரும் அல்வழிப் புணர்ச்சியும், புணரும் காலை - சேருமிடத்து, எழுத்து, சாரியை - எழுத்தும், சாரியையும், அ இரு பண்பின் -ஆகிய இரு வகையாலும், ஒழுக்கல் வலிய - புணரும் வலிமை உடையன (தன்மையின). சொற்கள் புணர்வது இரு வகைப்படும். வேற்றுமை உருபுகள் வெளிப்பட்டோ, மறைந்தோ, நிற்ப நிகழும் சொற்புணர்ச்சி வேற்றுமைப் புணர்ச்சி எனப்படும். இது தவிர்ந்த பிற புணர்ச்சி அல்வழிப் புணர்ச்சி ஆகும். அஃதாவது வேற்றுமை அல்லாதவழிப் புணர்வது. வேற்றுமைகள் எட்டு வகைப்படும். முதல் வேற்றுமைக்கும். எட்டாம் வேற்றுமைக்கும் உருபுகள் இல்லை. அவை பெயர்களாகவே அமைந்து எழுவாயாகவும், விளியாகவும் வழங்கும். இடைப்பட்ட இரண்டுமுதல் ஏழு முடிய உள்ள 'ஐ' முதல் 'கண்' ஈறாக வேற்றுமை உருபுகள் வரும். இதன் விளக்கம் பின்வரும் சூத்திரத்தில் காண்போம்.

(எ.டு)

'யானையைக் கண்டேன்'

இங்கு யானை என்ற பெயரோடு 'ஐ' என்ற இரண்டாம் வேற்றுமை உருபு சேர்ந்துள்ளது. கண்டேன் என்ற வருமொழி புணரும்போது யானை+ஐ+கண்டேன் = 'யானையைக் கண்டேன்' என வரும். இவ்வாறு வேற்றுமை உருபு பெற்றுப் புணர்வது வேற்றுமைப் புணர்ச்சி.

'யானை வருகிறது' இதில் 'யானை' என்பது பெயர். 'வருகிறது' என்பது வினை. யானை+வருகிறது, 'யானை வருகிறது' இத்தொடரில் 'ஐ' முதலிய வேற்றுமை உருபு இல்லை. இவ்வாறு வேற்றுமை உருபுகள் இல்லாமல் புணர்வது 'அல்வழிப்

புணர்ச்சி' இது பற்றிய விரிவும் விளக்கமும் மேல்வரும் சூத்திரத்தில் காணலாம். எழுத்தே, சாரியை - புணர்ச்சியில் எழுத்தோ சாரியையோ பெற்று வரும். பூ+செடி = பூச்செடி. 'ச்' என்னும் மெய்யெழுத்து மிக்கு வந்தது. மகவின் கை - மக+இன்+கை என விரியும். இங்கு 'இன்' என்பது சாரியை. சாரியைக்குப் பொருள் கிடையாது. வேற்றுமை உருபுகளும் தனித்து நின்று பொருள் தாரா. ஒழுக்கல் - ஒழுகுவது, நடப்பது, இயங்குவது. வலிய - உறுதியாக.

இச்சூத்திரத்தில் புணர்ச்சி இருவகைப்படும் என்பதும், அவை 'வேற்றுமைப் புணர்ச்சி', 'அல்வழிப்புணர்ச்சி' என்பதும் கூறப்பட்டன.

- தொடரும்......

# பாராட்டுகிறோம்

*மதுரை செந்தமிழ்க் கல்லூரியின் மேனாள் முதல்வர் பேராசிரியர் முனைவர் அ. தட்சிணாமூர்த்தி அவர்கள் தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் பேசுவதிலும் எழுதுவதிலும் வல்லவர். பாரதிதாசனின் புரட்சிக்கவியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். அபிராமி அந்தாதியை மொழி பெயர்த்து செந்தமிழ் இதழில் வெளியிட்டுள்ளார். அன்னார் தமிழ்க்காதலை உலகிற்கு அறிவுறுத்தும் பொருட்டுச் சங்கஇலக்கியங்களுள் அகநாநூற்றையும் நற்றிணையையும் மொழி பெயர்த் துள்ளார்கள். அவற்றுள் அகநானூற்று மொழி பெயர்ப்பைப் பாரதிதாசன் பல்கலைக்கழகமும் நற்றிணை மொழிபெயர்ப்பை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் அண்மையில் வெளியிட்டுச் சிறப்பித்துள்ளன. அன்னாரின் அரிய செயலைப் பாராட்டுவதில் மதுரைத் தமிழ்ச்சங்கம் பெருமைகொள்கிறது.*

*ஆசிரியர்.*

# கண்ணகியின் தமிழறிவு

*பேரறிஞர் ந. சுப்ரமணியன்*

'பதியெழுவறியாய் பழங்குடி கெழீஇய, பொதுவறு சிறப்பிற்புகார்' நகரத்தில் 'மாகவாணிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்ப'ராய் வந்துதித்த கண்ணகி என்பாள் 'தீதிலாவடமீன்றிற' முடையாள் என்றும் 'மாதரார் தொழுதேத்த'த்தக்க பெருங்குணத்தாள் என்றும் இளங்கோவடிகளால் புகழப்பெற்றவள். அவள் கோவலன் என்னும் வணிகமகனை மணந்துபட்ட துன்பங்களைக் கூறுகின்றது சிலப்பதிகாரம். இக்காப்பியத்தில் தலைவன் புகழினும் தலைவி புகழ் சிறந்து விளங்குதல் காணப்பெறும். கற்பிற் சிறந்தவள் கண்ணகி என்னும் பழமொழியின் வாய்மை பல்லாற்றானும் விளக்கமுறும். தன் கணவன் கணிகைபாற் சென்று தன்னைப் புறக்கணித்ததைப் பொருட்படுத்தாது அவன்பால் அன்பு குன்றாமல் இருந்த பெருந்தகையாள். எல்லாச் சிறப்பிற்கும் உரிமையும் தகுதியும் பெற்றிருந்தும் துன்பம் ஒன்றுதான் அவள் வாழ்க்கையிற் கண்டது. அப்பெரியோள் மதுரையில் மாதரியகத்தில் தன் கணவனோடு தங்கியிருந்த காலத்தில், 'சிறுமுதுக் குறைவிக்குச் சிறுமை செய்தேனே' என்று கழிவிரங்கிய கோவலனைத் தன் காற்சிலம்பினொடும் பீடிகைத்தெருவிற்குப் போக்கினாள். ஆயினும் தீவினையிருந்தவாறு என் என்க! தீயனாகிய பொற்கொல்லன் ஒருவன் சூழ்ச்சியால் அவன் கொலையுண்டிறந்தனனாக, அது கேட்டறிந்த கண்ணகி அரசன் முன்சென்று வாதாடித் தன் கணவனது குற்றமின்மையை நிறுவி, மதுரை மாநகரினைத் தீக்கிரையாக்கித் தானும் அந்நகரினின்றும் மேம்பால் நெடிது சென்று ஒரு கானகத்தே 'மலைவேங்கை நறு நிழலில்' நின்று உயிர் நீத்தனள். மணவினைக்குப்பின் வாணாள் முழுவதும் துன்பம் ஒன்றே அனுபவித்த அச்சீரி(றி) யகற்பினள் புகழ்

இலக்கியத்தில் என்றும் நிலவும். அவளைத் தெய்வமாக்கி அவட்குக் கோவில் சமைத்து அதில் வழிபாடு நடத்த ஏற்பாடு செய்தனன் சேரர் கோமான் செங்குட்டுவன்.

ஈதிங்ஙனமாக அப்பெருந்தகையாள் கவிதை இயற்றும் அளவு தமிழறிவு பெற்றிருந்தனள் என்று சிலர் கூறாநிற்பர். அன்றியும் அதற்குச் சான்றாக அவள் இயற்றியதாகக் கருதப்படும் ஒரு செய்யுளினையும் எடுத்துக்காட்டுவர். யாப்பருங்கலவிருத்தி யுரையில் ஆரிடப் போலிக்கு உதாரணமாகக் காட்டப் பெற்றுள்ள மூன்று செய்யுள்களில்,

கண்டகம் பற்றிக் கடக மணிதுளங்க
ஒண்செங் குருதியி லோஒகிடந்ததே - கொண்டிக்
கெழுதகைமை யில்லேன் கிடந்தூடப் பன்னாள்
அழுதகண் ணீர்துடைத்த கை.

என்னும் ஒரு வெண்பாவும் காணக்கிடக்கின்றது. இதனைப் ‘பத்தினிச் செய்யுள்’ என்று அவ்விருத்தியுரைகாரர் கூறுவர்.

இதனின்றும் அறிஞர் மு. இராகவ ஐயங்காரவர்கள் சில முடிபுகள் காண்பர். அவற்றில் ஒன்று இப்பாடல் கண்ணகியாற் பாடப் பெற்றது என்பது. அவள் பத்தினியாதலின். ஆயினும் சிலப்பதிகாரத்தில் யாண்டும் அப்பெருந்தகையாள் செந்தமிழ்ப் புலமை மிக்கவள் என்று குறிப்பிடப்படாமை காணத்தக்கது. அன்றியும் இச்செய்யுளைப் ‘பத்தினிச் செய்யுள்’என்ற மாத்திரத்தில் அது பத்தினியால் இயற்றப்பெற்ற செய்யுள் என்றுகொள்ள வேண்டும் என்பதின்று. ஒரு பத்தினி கூறியது போல அவள் வாக்கால் வேறொரு தமிழ்ப் புலவர் இதனை இயற்றினார் எனல் பொருந்தும் என்க. அவ்வாறாயின் பத்தினிச் செய்யுள் என்னும் தொடருக்குப் பத்தினி பற்றிய செய்யுள் என்று விரித்துப் பொருள்காண வேண்டும் என்க.

இப்பாடலில் ‘கெழுதகைமையில்லேன்’ என்று தன்மை யொருமை வரய்பாட்டாற் கூறப்பட்டுள்ளதே எனில் அதுவும் ஒருவகைக் கவிமரபு என்றே கூறி விடுக்க...

# கல்விப்பயிற்சிக்குரியது தாய்மொழி*

*இராதாகிருஷ்ணபிள்ளை*

மொழி என்பது, மாந்தருள் ஒருவர்கருத்தினைப் பிறரொருவருக்குத் தெரிவிக்கும் கருவியாயுதவுவது; மக்களை விலங்கினின்றும் வேறுபடுத்திவிளக்குவது; பெரியார் கண்டுணர்ந்த அரும்பெரும் உண்மைகளைப் பிறர்க்குப் பயன்பெறுத்தி உய்விக்கும் கருவியாவது.

இனி, உலகில் வேறுவேறுதேயத்தில் வேறுவேறு மாந்தரும் தத்தம் நாகரிக அளவிற்கேற்பத் தனித்தனிமொழிகள் வகுத்து அவைகளின் உதவிகொண்டு தம்முன் அளவளாவிக் களித்துவாழாநிற்பர். இவ்வாறு, வகுக்கப்பட்ட மொழிகள் அவ்வந் நாட்டினர்க்குத் தாய்மொழிகளாகின்றன.

இனி, கல்வி என்பது அறிவு, வித்தை எனப் பொருள்படும். இது "கல்" என்னுந் தாதுவினின்றும் பிறந்தது. கல்லுதலாவது தோண்டுதல், எனவே கல்வியாவது விஷயங்களை ஆராய்ந்தறிவதாம். இவ்வாராய்ச்சிதானும் மனிதர்கள் நாகரிகநிலை எய்தப்புக்க காலந்தொடங்கி நிகழப் பெற்றுவருகிறது. இவ்வாறு ஆராய்ந்து காணப்பெற்றன நூல்களிற் பொதிந்து வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே கல்வியாவது நூல்களைக் கற்றுணர்தலாம். இத்தகைய கல்வியறிவினைத் தேடுவதற்குத் தாய்மொழியே சிறந்த கருவி என்பது இன்று நாம் காணக்கிடக்கும் விஷயமாகும்.

---

★இது கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் ஐந்தாம் வருடக்கொண்டாட்டத்தில் இராமநாதபுரம் ஸமஸ்தானாதிபதியும், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் அக்கிராசநாதிபதியுமான ஆனரபிள் ஸ்ரீமத்-ராஜராஜேச்வரசேதுபதி மஹாராஜா அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் ஸ்ரீமத்- இராதாகிருஷ்ணபிள்ளை அவர்களாற் படிக்கப்பட்டது.

இப்பொழுது நமது பள்ளிக்கூடங்களில் கல்விப்பயிற்சிக்கு ஆங்கிலத்தையே முக்கியக்கருவியாக உபயோகிக்கின்றனர்.

நந்தேயம் கீழிந்தியாவர்த்தகக் கூட்டத்தாரின் ஆளுகையிலிருந்தபோது பத்தொன்பதாவது நூற்றாண்டின் துவக்கத்திற் கல்வியானது தாய்மொழிகளிலோ, அன்றி ஆங்கிலத்திலோ, கற்பிக்கப்படவேண்டியதென்பதைப்பற்றிப் பெரியதோர் ஆசங்கை நிகழ்ந்தது. சுமார் 12 வருஷம் இவ்வாதம் நிகழ்ந்து கடைசியாக 1835ஆம் வருடம் ஸ்ரீ பெண்டிங்பிரபு அவர்கள்காலத்தில் பிரதமவகுப்புக்களிற் பாடங்கள் தாய்மொழியில் நடைபெறினும் உயர்தரக்கல்வி ஆங்கிலத்திலே தான் போதிக்கப்பட வேண்டுமென்று முடிவுசெய்யப்பெற்றது. இத்தீர்மானத்தால், தாய்மொழிகள் விசேஷமாக வலிகுன்றிச் சீரிழக்கப்பெற்றன.

மொழி என்பது விஷயங்களை அறிவதற்குக் கருவியாயுள்ளதென்று நாம் கண்டோமன்றோ? இப்பொழுது, தாய்மொழியும் பிறமொழியும் என இருமொழிகள் உளவாக, நம் கல்வியறிவினைப் பெருக்கிக்கொள்ள எம் மொழியினைத் துணைக்கோடாகக்கொள்ளுவது சிறப்புடைத்தென்பது கடா.

தாய்மொழியோ நாம் குழவிப்பருவந்தொட்டுப் பயின்றுவந்தது; பாலொடு அருந்தி, சோறொடு அயின்று, துயிலொடு உறங்கியதாம்; இன்பிலும், துன்பிலும், யாண்டும், என்றும், நம்மொடு பயிலுவதாம். இக்கருவியினை விசேஷமாக வருந்தித் தேடப்பெறுவதும் வேண்டுவதில்லை. தேடுவதில் அளவுமிஞ்சியபொருட்செலவும் இன்று. பழக்கினாலும் இயல்பாலும் குணத்தாலும் தாய்மொழிக்கருவியினை உபயோகிப்பதிலும் மிகக் கைவந்துள்ளோம். 'பிறமொழிக் கருவிகளோ, மிகவரிதில் முயன்றே பெறப்படுவன; அளவில்

ஊதியச்செலவு நிகழ்விப்பன; அன்றி இவ்வாறு வருந்திப் பெறினும் அவைகளைக் கையாடுவதிலும் வல்லேமல்லேம். தாய்மொழிகளால் விஷயங்களை உணருமாறுபோற் பிற மொழிகளால் அறியுமாறில்லை. சுருங்கச்சொல்லிற் பிறமொழிவாயிற் கல்வி கேவலம் உயிரற்றசெய்கையாகும். இதுமட்டுமோ? அன்னியமொழிகளால் நுண்ணிய ஆராய்ச்சிகள் நிகழ்த்துவதும், அரியவிஷயங்களைக் கற்றுணர்வதும், நமதிளமாணவர்களின் மூளைக்கு அளவில்லாச் சுமையைக் கொடுக்கின்றன. ஆகையால் அவர்கள் மேலும் மேலும் கற்றுத் தேறவியலாதவர்களாவதோடு, அவர் சரீரசுகங்குன்றி விரைவில் முடிவுமெய்துகின்றனர். நமது மாணவர்கள் தாய்மொழியிலேயே கல்வி பயிலுவதென்றால் அவர்கள் பிறமொழிகளைக் கற்றுத்தேறுவதிற் செலவாகும் காலத்தையும் பணத்தையும் காப்பாற்றிக்கொள்வதோடு அதனால் எய்தப்பெறும் அளவிறந்த பிரயாசத்தையும் நீக்கிக்கொள்வார்களன்றோ?

இக்கருத்தினையே சென்றவாண்டு சென்னைசர்வகலா சங்க உயர்தரப்பரீஷைகளில்தேறிய மாணவர்களுக்குத் தகுதிச்சீட்டு அளிப்பதற்காகக்கூடிய மகாசபையில் கனம் Harold Stuart துரையவர்கள் பின்வருமாறு தெரிவித்தார்கள்-

"நமது பரீஷைகளில் எவ்வளவு பெயர்கள் தவறிப்போகிறார்கள் என்பது எனக்குச் சிறிதும் ஆச்சரியமில்லை. இத்தனைமாணவர்கள் தேறுவதே எனக்கு வியப்பை விளைவிப்பதாகும்! உங்களிற் பெரும்பாலர் உமக்கு உரியதல்லாததொரு அன்னியமொழியிற் கல்விகற்க வேண்டியிருக்கிறது. 240 லட்சம் தெலுங்கர்களும், 180 லட்சம் தமிழர்களும் தங்கள் கல்வியிற் பெரும்பாகத்தை அன்னியமொழி யொன்றின் உதவிகொண்டே தேடவேண்டுமென்பது நம்புவதற்கும் மிகக்கடினமாயிருக்கிறது. இவ்வளவு

தொகையுள்ள சனங்களின் தாய்மொழியை மாற்றுவதென்பது அசாத்தியம். இவர்கள் கல்வியறிவில் பெரும்பாகம் பிறமொழி யொன்றின் உதவி கொண்டே தேடப்பெற வேண்டியதாயின், கல்வி அவர்கள்மாட்டு இலேசாகப்பரவுவதற்கில்லை. பிள்ளைகளுடைய முயற்சியெல்லாம் மொழியைக் கற்பதிலேயே செலவாய்விடுவதன்றி, நூல்களிற் கூறப்படும் விஷயங்களை அறிவதற்குச் சக்தி ஒன்றும் இல்லாது போய்விடுகிறது. இத்தகையபழக்கம் வீணே காலத்தையும் அறிவையும் செலவுசெய்விப்பதன்றி யாதும் பிரயோசனம் உள்ளதாகத் தெரியவில்லை"

சின்னாண்முன்னர் மதுரையிற் கல்விப்பயிற்சி சம்பந்தமாகக்கூடிய மகாசபையில் (Educational Conference) சபாநாயகம் வகித்த ஸ்ரீமான் P.T.சீனிவாசையங்கார் அவர்களும் இவ்வபிப்பிராயத்தைத்தழுவியே பேசினார்கள். கனம் ஹார்டிங்பிரபு அவர்கள் சென்றவாண்டு லாகூரில் விலங்குகளின் சிகிச்சாமுறைமைகளைப் பற்றிப்போதிக்கும் பாடசாலையொன்று தாபகமானபோது பிறபாடசாலைகளைப்போலாது அங்குத் தாய்மொழியிலேயே மாணவர்களுக்குக் கல்வி போதிப்பதாகச் செய்திருந்த ஏற்பாட்டினைப்பற்றி மிக வியந்து பேசியுள்ளார்கள். உலகெலாம்போற்றும் மகாபண்டிதரான கனம் இராமேந்திரநாத் டாகூர் அவர்களும் தாய்மொழியிற் கல்வியே சிறந்ததெனக் கொண்டவர்களென்பது அறிஞர் பலரும் நன்குணர்ந்த தொன்றாகும். இவ்வாறு பிரபல அறிஞர் பலரும் பிறமொழியிற் கல்வி பயிற்றுவது அவசியமில்லாதபாரத்தை நமதிளமாணவர் களுக்குக்கொடுத்து அவர்களுடைய அறிவாற்றல்கள் நன்கு பிரகாசியாது கெடுக்கிறதென்று அபிப்பிராயப்பட, திருவல்லிக்கேணிப் பெண்பாடசாலையிற் கல்விப்பயிற்சி ஆங்கிலத்தில் நிகழ்வதைப் பற்றிச் சிலமாதங்களுக்குமுன் சென்னைச்சட்ட நிரூபணசபையில் எழுந்த ஆசங்கைக்கு

விடையளிக்கமுயன்ற சென்னை வித்தியா இலாகாத்தலைவர் கனம் Stone துரையவர்கள் இதற்கு முற்றும் முரண்படப் பேசியமை மிகவும் வியப்பை விளைப்பதாகும்.

நமது இந்தியநாட்டிலுள்ள தாய்மொழிகளுள், பல மிகப்பழமைவாய்ந்தனவும் அளவற்ற இலக்கிய விலக்கணக் கிரந்தங்களையுடையனவுமான. தாய்மொழிகளில் அமைந்துள்ள நூல்கள் அவ்வம்மொழிக்குரிய இனத்தார்கண்டறிந்த உயர்ந்த கருத்துக்களையும், அவருட்பெரியார்பலரும் போதித்த அரும்பெரும் உண்மைகளையும் அடக்கிநிற்பனவாம். இவைகள் யாவும் அவ்வவ்வினத்தினர் உலகில் முன்னேற்றமடைவதற்கு இன்றியமையாது வேண்டப்படுவன. இத்தகைய இலக்கியங் களைப் படித்துத்தேறி அவை கூறும்வழியொழுகி மாந்தர் முன்னேற்றமடைவது தாய்மொழிப்பயிற்சியினாலேயே எய்தப்பெறுவதொன்றாம். இவ்வுண்மையினை நன்கறிந்தன்றோ ஸ்ரீமான் காந்தியவர்களும் தாம் புதிதாகவாரம்பித்த ஆச்சிரமத்தில் தாய்மொழியினையே கல்விப்பயிற்சிக்கேற்ற கருவியாகக்கொண்டனர்.

பின்னரும் பாருங்கள்! ஒவ்வொருமொழியும், ஒவ்வொரு நாடும், ஒவ்வொருமக்கட் டொகுதியும் உலகின்நாகரிகத்தை வளர்க்கும் தொழிலில் உரிமைபூண்டனவாம். அவ்வம்மக்கள், நினைத்தவுங் கண்டவும், அறிந்தவும் அவரவர் தாய்மொழியி லேயே பொதிந்திருக்கின்றன. ஆகவே, உலகின் நாரிகவளர்ச்சி, அதன்மாட்டு உலவுகின்ற அவ்வத்தாய் மொழியின் வாயிலானே தொழிற்படுவதன்றிப் பிறவாற்றான் இயலாததாகும்.

அன்றியும், நமதருமைத் தாய்மொழிகள் நஞ்சிறுவர்களின் கல்வியில் ஏற்றஸ்தானத்தை வகிக்கப்பெறாமையால் அவை பெரிதும் வளர்ச்சிகுன்றித் தேய்ந்தொழியக் காரணமாகின்றன. ஒரு தேயத்தின் உயர்வும் அதற்குரிய மொழியின் வளர்ச்சியும்

ஒன்றற்கொன்று நீங்காத சம்பந்த முடையனவென்பது சரித்திர நூல்வல்லுநர் நன்கறிந்த உண்மையாம். நமது தாய்மொழியின் ஒளிகுன்றி நாளும் தேய்ந்துவருவதாயின் நமது நாடும் தனது பொலிவிழக்கக் காரணமாமன்றோ. இத்தகைய சம்பவம் நமது முயற்சிக் குறைவினால் ஏற்படுவதாயின், உலகிலுள்ள பற்பல நாட்டினரின் வரிசையில் நாம் சற்றும் ஆண்மையற்றவர் களாகவன்றோ காணப்பெறுவோம்! தம்மையீன்ற நாட்டின் பெறுமையினையும் தம் ஆண்மையினையும் ஒருங்கிழக்கத் துணிபவர் நம்மவருள் யார்? வீரவெற்றிகாட்டி அரசவாகை சூடித்திகழ்ந்த தமிழ்ப்பெரு வேந்தர்களின் வழித்தோன்றல் களாகிய நாமோ இவ்விழிதகைக்கு ஆளாகுவோர்?

கல்வியின் நோக்கமாவது உலகிற் பற்பலவிஷயங்களை ஆய்ந்தறிவதும், நற்குணநற்செய்கைகள் அமையப்பெறுவதும், அறிவாற்றல்களை நம்மாட்டுப் பெருக்கிக் கொள்வதுமாம். பிறமொழிப்பயிற்சி சர்வகலாசங்கத்தினர் நியமிக்கும் பரீஷைகளில் தேறுவதற்குமட்டும் பழக்குவதன்றி வேறுவிசேடப்பிரயோசனம் பயப்பதைக் கண்டிலம். இப்படிப்பெல்லாம் பள்ளிக்கூடத்தோடே நின்றுவிடுகின்றன. ஆயுள்முற்றும் நிலைத்திருந்து நம்பால் இயற்கையிலேயே அமைந்துகிடக்கும் ஆற்றல்களைக்கிளப்பி நம் வாழ்நாளைப் பயன்பெறுத்துவதில்லை.

கல்வியானது பிறமொழிவாயிலாய் எய்தப்பெறுங்கால் அதற்குரிய சக்தி எங்கேயோ போய்விடுகிறது. நமக்குப் பழக்கமில்லாத ஆகாரங்களைச் சாப்பிடுங்கால் அது எவ்வாறு சீரணமாகாது வெளிப்படுகிறதோ அவ்வாறே கல்வி பிறமொழிவழிப் பெறின் அஃது நமக்குரியதாய்நின்று பயன்பெறுத்துவதில்லை.

இதுகாறும் நாம் தாய்மொழியிற் கல்வி பயில வேண் வதன் அவசியத்தினைப் பற்றிப் பேசினோம். இனி இதற்கு ஏதாவது இடர்ப்பாடுகள் உண்டாவென ஆராய்வோம். நம் நாட்டிற் பிறமொழிவாயிலானேயே கல்வி கற்கவேண்டுமென்று சாதிப்பவர்கள் கூறும் ஆட்சேபணைகள் இரண்டுண்டு. அவைகள் இந்தியநாட்டிலுள்ள தாய்மொழிகளுள் பெரும்பாலன சாத்திர நூற்கருத்துக்களை வெளியிட ஏற்றவல்லவென்பதும், இவைகளைப் போதிப்பதற்கு ஏற்ற பாடப்புத்தகங்கள் இல்லை என்பதுமாம்.

பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் பாடஞ்சொல்லிக் கொடுப்பதை நாம் நன்கு கவனிப்போமாகில் இவ்வாட்சே பங்களுள் முன்னது எத்துணைவலியற்றதென்பது புலப்படும். பிள்ளைகள் விஷயங்களைத் தம் மொழிவாயிலானன்றிப் பிறமொழிகளின் வழியேதான் நன்குணரவல்லவர்கள் என்பது இயற்கைக்கு முற்றும் மாறானதொரு கொள்கையாம். உபாத்தியாயர்கள் உயர்தரப் பாடசாலைகளில் ஒவ்வொரு சாத்திரங்களையும் கற்பிக்குந்தோறும் பிள்ளைகளின் தாய்மொழிவாயிலானே விஸ்தரித்துக்கூறுவது நம்மவருள் பலர்க்கும் அனுபவசித்தம். இஃதிவ்வாறாக, தாய்மொழிகள் சாத்திரக்கருத்துக்களை வெளியிட ஏற்ற கருவிகள் அல்லவென்று கூறுவது யாங்ஙனம் பொருத்தமுடையதாகும்.

இனி இக்கட்ஷியாருடைய மற்றொருகூற்றையும் விசாரிப்போம். அதாவது தமிழ் முதலிய மொழிகளில் மேலைநாட்டுச் சாத்திரங்களைக் கற்பிக்க ஏற்ற பாடப்புத்தகங்கள் இல்லை என்பதாம். இக்கொள்கையினை உடையார் உலகில் காரியகாரண நிகழ்ச்சிமுறை அறியாதவர்கள் ஆவார்கள். ஓரூரில் உண்ணவோ, உடுக்கவோ, அணியவோ, ஆடவோ,

ஒருபொருண்மேல் பொதுவாய்ச் சனங்களுக்கு விழைவுண்டா குமிடத்துக் கூடியவிரைவில் அவ்வூர்க்கடைகளில் அப்பொருள்கள் வேண்டிய அளவு நிறையப்பெறுவது நாம் தினமும் கண்கூடாகக் காண்பதொன்றாம். படிப்பறிவின்றிப் பாடப்புத்தகங்கள் எழுத முன்வருவார்யார்? மொழியின் அபிவிருத்திகருதி எழுதத் துணிந்த ஒருசில புலவரும் தங்கள் முயற்சியாற் கிடைக்கப்பெறும் ஊதியம் யாதுமின்றாய்த் தம்கைப் பொருளுந்தோற்று வருந்துகின்றதும் நாம் அறியாததோ? நமது சர்வகலாசங்கத்தினர் இப்பொழுது தாய்மொழியினை உயர்தரக்கல்விக்குக் கருவியாக வகுக்குமிடத்துப் பாடப்புத்தகங்கள் விரைவில் வெளிவந்துலவுமென்பதற்குச் சற்றும் தடையின்று. தாய்மொழியிற் சாத்திரங்களைப் போதிப்பதற்கேற்ற பாடப்புத்தகங்கள் எழுதுவது அசாத்தியமென்று கூறுவது முற்றும் தப்பாகும். பங்காள பாஷையிற் சரித்திரம், பூகோளம், இரசாயனம், பீஜகணிதம், நிலவளவை நூலாதிய பலசாத்திரங்களிலும் பாடப்புத்தகங்கள் ஏற்படவில்லையா? பரோடா இராச்சியத்தில் "கலாபலன்" என்னும் கைத்தொழிற் பாடசாலையில் மேனாட்டுச் சாத்திரங்கள் அத்தனையும் தாய்மொழியிலேயே போதிக்கப்பெறவில்லையா? வெகுநாள்வரையில் மிகவும் சாதாரணநிலையிலிருந்த சப்பானிய மொழியில் இப்பொழுதேறப்பெறாத மேனாட்டுச் சாத்திர நூல் யாதுளது?

1882ம் ஆண்டு சப்பான்தேயத்துப் பிரதானமந்திரியாகிய கனம் கவுண்ட். ஒகூமாபிரபு அவர்களால் வசீடா (Waseda) சர்வகலாசங்கம் தாபிக்கப்பெற்றபொழுது அதிற் போதிப்பதெல்லாம் தாய்மொழியிலேயே இருக்கவேண்டு மென்பது அதன் தாபகருடைய நோக்கங்களுள் ஒன்றாம். அப்பொழுது அம்மொழியில் ஏற்ற பாடப்புத்தகங்களில்லாதது அவர் கொண்ட கருத்தினை நிறைவேற்ற ஓர் பெருந்தடையா

யிருந்தது. ஆனால் கவுண்ட் ஒகூமாபிரபு அவர்கள் நமது இந்திய சர்வகலா சங்கத்தார்களைப் போலப் பிறமொழிவாயிலாய்க் கல்வியூட்ட முயலவில்லை. புத்தகங்களை வெளியிடுவதற்காக வென ஒருசபை கூட்டுவித்து அதன்மூலம் வேண்டிய புத்தகங்களை எழுதித் தம்மொழியில் எல்லாச் சாத்திர நூல்களையும் அமைத்துக் கொண்டனர். இரண்டுவருடத்திற்கு முன்பு எடுத்த கணக்கில் 180 பண்டிதர்களும் 7000 மாணவர்களும் அங்கு இருப்பதாகத் தெரிந்தது. சப்பானியர்களின் முயற்சி "மனமெங்குளது வழியங்குளது" (Where there is a will there is a way) என்னும் ஆங்கிலப்பழமொழியின் உண்மையினை விளக்கும்.

நாம் இதுகாறும் கூறிப்போந்தவற்றால், தாய்மொழிக் கல்விப்பயிற்சிக்கு இன்றியமையாததென்றும், அதற்குத் தாய்மொழிகள் பலவாற்றானும் ஏற்றபெற்றி வாய்ந்தனவென்றும், அம்மொழிகள் சாத்திரப் பயிற்சிக்கு ஏலாதனவென்பது பொருந்தா உரை என்றும் கண்டோம். இனி நந்தாய்மொழிகள் நஞ்சிறுவர்களின் கல்வியில் ஏற்ற ஸ்தானத்தை வகிக்குமாறு நாம் எடுத்துக்கொள்ளவேண்டிய முயற்சியினைப்பற்றிச் சிறிதுயோசித்து விஷயத்தை முடிவுசெய்வோம். இந்திய நாட்டிலுள்ள சர்வகலாசங்கங்கள் தாய்மொழிகளை ஆதரிப்பதிலாவது அன்றி அவைகளை முன்னுக்குக் கொண்டுவருவதிலாவது விசேஷ தீவிரங்காட்டியதில்லை. ஆகையால் இவ்வழியில் நம் சர்வகலாசங்கங்களின் உதவியை எதிர்பார்ப்பதில் அதிகப் பலனில்லையாம். தாய்மொழி விருத்திகருதி ஏற்பட்டுள்ள சபைகளே இப்பொறுப்பினை ஏற்றுக்கொள்ளத்தக்கவை.

நம்நாட்டில் தாய்மொழிகளை வளர்க்க முன்வந்தவரில் வங்காளியரும், மகாராட்டிரரும், தெலுங்கர்களுமே தம்

முயற்சிவலியால் தத்தம் மொழிகளுக்கு அளவற்ற நன்மைபெறுத்தியவர். தமிழ்நாடு இன்னும் பேச்சளவிலேதான் நிற்கிறது. ஒருசிலர் முயற்சியால் தமிழ்ப்பாடசாலைகள் சில அங்குமிங்கும் தாபிக்கப்பெற்றுள்ளன. ஆனால் தமிழைமட்டும் போதிக்கும் பாடசாலைகள் இக்காலத்து மிகுதியும் பயன் படுவனவன்று. பிள்ளைகளுக்குச் சீவனோபாயமாகும் வழியொன்றுங்காட்டாது வாளா தமிழைமட்டுங் கற்பிப்பின் அவர்களுக்கு அக்கல்வியினாலாகும் இலௌகிகப் பிரயோசனம் *யாது? நங் கரந்தைச்சங்கத்தார் தீர்மானித்திருக்கிறபடி* கைத்தொழிலும், தமிழும் ஒருங்கேகற்பிக்கும் கலாசாலைகளே இக்காலத்துப் பயன்படுவன. உயர்ந்த கைத்தொழில்களைக் கற்றுக்கொள்ளவேண்டுவோர் அவ்வத்தொழிலுக்கேற்ற சாத்திரங்களையும் கற்றுத்தரவேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே பலசாத்திரங்களைத் தமிழிற் கற்பிப்பதற்கும், அவைகளைக் கற்பிப்பதற்கேற்ற பாடப் புத்தகங்களை நம்மொழியில் ஏற்படுத்திக்கொள்ளவும் நமக்கு அவசரமுண்டாகிறது. இவ்வாறு இச்சங்கத்தார் கொண்டவழி, நந் தாய்மொழியினைக் கல்விப்பயிற்சிக்கு ஏற்ற கருவியாக்கமுயன்ற பலவழிகளுள்ளும் சிறந்ததாமாறு கண்கூடாம்.

அருள்தமிழாளப் பெருந்தகையோர்களே! பன்னெடுநாள் முன்னர் உலகெல்லாம் தன் திப்பியஒளி நிழற்றிவிளங்கிய நம் பண்டைத்தமிழரசி பரிபவமெய்தினாள். அவள் நும் அரும்பெறல் அன்னை. நீவிர் அவள்தம் அருமைப்புதல்வர். அவள் துன்புதுடைத்துத் துயரகற்றுவது நுங்கடன். நீவிர் தொல்குடிவந்தீர், துகளில்மரபினீர்! நும்மரபின்சீருக்கிலக் காகுமின்! அன்னைக்குதவமுந்துமின்! அவள் தொண்டுதெருசீரினைச் சூடுமின்! புகழ்மின்!! பாடுமின்!!! பரவுமின்!!!

# வாழ்வின் அடித்தளம் தொடக்கக் கல்வியே!

சு.கு.பன்னீர் செல்வம்

## முன்னுரை:

இன்றைய உலகில் மனித சமுதாயத்தின் வாழ்க்கைத்தர மேம்பாட்டிற்கும் திறன் வளர்ச்சிக்கும் முதன்மை அளவுகோலாகக் கல்வி மதிப்பிடப்படுகிறது. இத்தரமான கல்விக்கு அடிப்படையான தொடக்கக்கல்வியைத் தரக்கூடியது ஆசிரியர்களையே சாரும்.

கல்விக்காகச் செய்யப்படும் முதலீடு மனிதன்மீது செய்யக்கூடிய முதலீடாகக் கருதப்படுகிறது. கல்விப் பெருக்கக் காரணியாக அமைவது தொடக்கக்கல்வியே. தொடக்கப்பள்ளிக் குழந்தைகள் மகிழ்ச்சியோடு கற்றல் செயல்பாடுகளில் விருப்பத்துடன் ஈடுபடத் தேவையான சூழலை அமைத்துக் கொடுப்பதே முதன்மையான பணியாகும்.

உலகம் மனிதநேயம் என்னும் உச்சி முனையில்தான் சுழன்றுவருகிறது. கல்வி தரும் சிறப்புகள் எல்லாம் வெறும் அணிகள் மட்டுமே. இதனைப் பிஞ்சு மனங்களில் விதைப்பது தொடக்கப்பள்ளி ஆசிரியர்களே. அத்தகைய அரியபணியை மேற்கொண்டுள்ள நல்லாசிரியர்களின் நற்பண்புகளை இனம் கண்டறிவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## ஆசிரியர் – ஒரு விளக்கு:

ஒரு நாட்டின் சிறந்த மூளை ஆசிரியர்களுடையது, குறிப்பாக இதற்கு அடித்தளம் அமைப்பது தொடக்கப்பள்ளி

ஆசிரியர்களே. இந்த ஆசிரியர்கள் செய்திகளை, பாடங்களை விநியோகிக்கும் எந்திரங்களாக மட்டும் இல்லாமல் மாணவர்பால் அன்பும், பரிவும் கொண்டவர்களாக இயங்குதல் வேண்டும்.

"அர்ப்பணிப்புணர்வும் முழு ஈடுபாட்டுத் தன்மையும் கற்பித்தலைத் தூய இலட்சியமாக மதிக்கிற பாங்கும்கொண்ட ஆசிரியர்கள் இல்லாதவரையில் நமக்கு நல்ல கல்வித் திட்டம் கிடைக்க முடியாது" என்றார் டாக்டர் இராதாகிருஷ்ணன் அவர்கள். ஆசிரியரின் இதயம் அறிவுவிளக்காக இருந்து என்றும் பிரகாசிக்கவேண்டும். ஆசிரியரிடம் அன்பும், மரியாதையும் கொண்டு ஒழுக வேண்டும் என்று மாணவர்களுக்குச் சட்டம் இயற்ற முடியாது. அத்தகைய மரியாதையைத் தமது திறமையால் நடத்தையால் ஆசிரியர்கள் சம்பாதிக்க வேண்டும்.

ஆசிரியரின் அறிவுநதி ஒருபோதும் தேங்கிக்கிடந்து துர்நாற்றமுள்ள சாக்கடையாகி விடக்கூடாது. சுத்தமான புதிய மழைநீர்போல் அருவியாகப் பிரவாகமெடுத்து ஓடவேண்டும். பலவித நூல்களிலிருந்தும், உயர் கல்வியிலிருந்தும் மேலான அறிவைப்பெற்றுக்கொள்ளுதலும் அதனைத் தம் மாணவர்களுக்குப் போதித்தலும் (விநியோகித்தலும்) ஆசிரியரின் இருகண்களாகும். இந்த அரிய கொள்கைகளின் மாண்பு கருதித்தான் உயர்ந்த நிலைத் தத்துவஞானிகளும்கூட ஆசிரியப்பணியை விரும்பி ஏற்றனர். உலகில் மிகச்சிறந்த ஆசிரியர்கள் தத்துவஞானிகளாகவும், மிகச்சிறந்த ஞானிகள் ஆசிரியர்களாகவும் அமைந்ததன் இரகசியம் இதுதான்.

**சமுதாய மாற்றுக் காரணியாக ஆசிரியர் :**

ஒவ்வொரு ஆசிரியரும் கற்பித்தலில் ஒரு கொள்கையைப் பின்பற்ற வேண்டியிருக்கிறது. அப்போதுதான்

அவருடைய முழு ஆற்றலும் கல்வித்திட்டத்தில் ஊசிமருந்தாக நுழைந்து நலம் பயக்க முடியும். எனவே கல்வித்திட்டத்தில் ஆசிரியரின் பங்கு மிகவும் முக்கியமானது. ஒவ்வொரு நாடும் தன் சமூக-பண்பாட்டுத் தனித்தன்மையைக் காப்பதற்காகவும் காலத்திற்கேற்ப அதன் நாடு தழுவிய சவால்களைச் சந்திப்பதற்காகவும் தனக்கென்று ஒரு கல்வித்திட்டத்தை வகுக்கின்றது. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த காலங்களில்தான் கல்வி போதித்தல், கற்றல் திட்டத்தில் புதிய கோட்பாடுகள் நுழைந்திருக்கின்றன. அத்தகைய காலங்களில்தான் புரட்சிமிக்க ஆசிரியர்கள் நுழைந்து அறிவுப்பிரளயம் என்னும் சாதனை படைத்திருக்கிறார்கள். வகுப்பறை என்பது சமுதாயமேம்பாட்டுப் பாசறையாகும். மனிதநேயம் வளர்க்கப்படும் (நர்சரி) பண்ணையாகும். அறிவுபெருக, செய்திகள் மாணவரைச் சென்றடைய, திறமைகள் மேம்பட, ஒரு நாட்டின் மொத்த வளர்ச்சிக்கு வித்திடும் நல்லெண்ணவிதைகள் உருவாகும் விதைப்பண்ணையாக வகுப்பறையை ஆசிரியர்கள் உருவாக்க வேண்டும்.

நல்லாசிரியர் ஒருவர் தன் பொறுப்பினை உணர்ந்து சமூகப் பிரச்சினைகளை நுண்ணறிவால் கணக்கிட்டு அதனைச் சந்திக்கத் தன் மாணவனைத் தொடக்கப்பள்ளி நிலையிலிருந்து தயார் செய்கிறார். தேசிய ஒருமைப்பாடும் மனிதநேயமும் இங்கேதான் முளைவிடுகிறது. முதலில் இந்தியப்பண்பாட்டை மதித்துத் தன் பள்ளிக்கும் சமுதாயத்திற்கும், மாநிலத்திற்கும் உண்மையாக நடந்து மாணவனையும் நடக்க வைக்கிறார். அதோடு தொழிலை நேசிக்கிறார். தொழிலில் வேறுபட்ட சக ஊழியர்களையும் காழ்ப்புணர்வின்றி நடத்துகிறார். இவற்றையெல்லாம் விட அரசியல் நிர்ணயச்சட்டத்திற்குட்பட்டு நாட்டின் அமைதிக்கும் ஒற்றுமைக்கும், தனித்தன்மைக்கும் குந்தகம் வராவண்ணம் நடந்து காட்டுவார்.

## ஆசிரியரும் மாணவரும் :

ஒரு குழந்தை தன் பெற்றோரிடம் இருப்பதைவிடத் தன் ஆசிரியரிடம் நெருக்கத்துடனும் உரிமையுடனும் இருக்க முடிகிறது. இதனால் ஒரு ஆசிரியருக்கு அவருடைய மாணவர் ஒவ்வொருவரோடும் தனிப்பட்ட உறவு பிறக்கிறது. இதன் விளைவாக அக்குழந்தையின் முழுவளர்ச்சிக்கும் பொறுப்பேற்கும் நிலையில் அவர் இருக்கிறார்.

## நல்ல ஆசிரியர் யார்?

இளம் மனங்களில் நல்லவகைப் பாதிப்புகளை (தாக்கங்களை) ஏற்படுத்துவதும், நல்ல ஒழுக்கங்களை மனதில் பதியச்செய்யும்படி நடந்து காட்டுவதும் நல்லாசிரியருக்குரிய முதல்படி. ஆசிரியர் எல்லா நேரங்களிலும் எல்லாக் காலங்களிலும் நண்பனாக இருப்பவர். மாணவரின் குறைபாட்டிற் காகவும் ஐயப்பாட்டிற்காகவும் தன் செவிப்புலனைத் திறந்து வைத்திருப்பவர் ஆவார்.

நேரம் தவறாமை, எதனையும் கணக்கில் கொண்டு வரக்கூடிய கறார்தன்மை, மனிதருக்குச் சேவைபுரியும் மாண்பு, அடக்கம், எளிமை ஆகியவற்றைப் பிறர்க்குப் போதிப்பதிலும் ஒழுகுவதிலும் எடுத்துக்காட்டாகத் திகழ்பவரும் ஆசிரியரே. எல்லாவற்றிற்கும் மேலாக எந்த விசயத்திலும் எந்த நடவடிக்கையிலும் பாரபட்சம் காட்டாத கருமவீரரும் ஆசிரியரே. காலந்தவறாமையும், பாடத்திட்டத்தைப் பொறுத்த வரையில் அதனைச் சிறப்புடன் கற்பிப்பதற்காக எல்லாச்சிரமங் களையும் ஏற்றுக்கொண்டவராக இருப்பார்.

**நல்ல நண்பர்:**

மாணவனின் தனிப்பட்ட இரகசியங்களைத் தனக்குள் பூட்டி வைத்துக்கொள்வதோடு, தேவை ஏற்படும் போதெல்லாம் வழிநடத்துவதும், சமுதாய உடற்கூறு தொடர்பான, அறிவு ரீதியான உணர்வு வழியிலான மற்றும் அறவழியிலான வளர்ச்சியில் மாணவனை அழைத்துச் செல்வதும் நல்லாசிரியர் ஒருவரின் நட்பு நோக்கமாகும்.

மாணவனின் அசாத்திய அறிவினைப் பெருந்தன்மை யோடு வெளிப்படையாகப் பாராட்டுவார். முதலில் நடத்தை, பின்புதான் கொள்கை என்று செய்வதைச் சொல்பவராகவும் சொல்வதைச் செய்பவராகவும் இருப்பார். மாணவரின் மரியாதையை இந்த வழியில்தான் சம்பாதிக்க முடியும் என்று நம்பி நடந்து காட்டுவார். “ஹேஸ்லிட்” என்ற அறிஞர், “உளவியல் ரீதியாக யாவும் குழப்பமான சிக்கல்வாய்ந்த விஷயம் கற்பித்தல் என்பதுதான். பல படித்தரமான அறிவியல் அடிப்படையில் அதன் செயல்பாடு அமையவேண்டும்,” என்று எழுதுகிறார்.

உற்சாகப்படுத்துதல் :

ஒரு நல்ல ஆசிரியர் தன் மாணவரைக் கற்றலுக்கு முன்பு தயார் செய்ய வேண்டும். ஒரு மாணவன் ஒரு பொருளைக் கற்றுக்கொள்ளத் தடுமாறுகிறான் என்றால் அதற்குத்தகுந்த காரணங்கள் இருக்கவேண்டும். ஆசிரியரின் அனுபவம் மாணவரின் குறைந்து கற்கும் ஆற்றலுக்கான காரணத்தைக் கண்டுபிடித்துவிடும். ஆசிரியர் மாணவரைப் பாராட்டிப்பேசுவது நல்ல உற்சாகத்தைக் கொடுக்கும் அருமருந்தாகும். எனவே மகிழ்ச்சி அல்லது பாராட்டு என்பது மெதுவாகக் கற்கும்

மாணவனுக்குப் புது உத்வேகத்தையளிக்கும். முன்னதைவிட ஒருமதிப்பெண் கூடுதலாகப் பெற்றிருந்தால்கூட அவன் பாராட்டுக்குரியவனே. ஆசிரியரின் கவனம் தன் மேலிருக்கிறது என்ற ஒன்றே அவனுக்குப் பெருமையாக இருக்கும்.

கல்வி தரக்கூடிய அமைதி, மாசற்ற தன்மை, மனிதநேயம், அன்பு என்ற வரம்பற்ற நடத்தை எல்லாம் உற்சாகமூட்டுதலால் நல்ல மாற்றத்துடன் கூடிய வளர்ச்சியை ஏற்படுத்துகிறது.

## பெற்றோர், ஆசிரியர், மாணவர் – ஒரு முக்கோணத் தொடர்பு :

வாழ்க்கைக்குத் தேவையான செல்வமும் பதவியும் பெறுவதற்காகவே தன் மகன்/மகள் படிக்க வேண்டும் என்று நினைக்கும் பெற்றோர் பெரிய தவறை முன்நின்று செய்கிறார்கள் என்கிறார் காந்திஜி. இன்னும் தெளிவாகச் சொல்வதென்றால் கல்வியும், ஞானமும் பொருளுக்காகவும் பதவிக்காகவும் என்றே உறுதியாக நம்புகிறார்கள். இந்த வகையான கொள்கைகளைப் பெற்றோரின் மனதிலிருந்து களைவது ஆசிரியரின் கடமையாகும். ஒரு மாணவன் எப்படி இருக்கிறானோ அப்படியே ஏற்றுக்கொள்ளுங்கள் என அவனுடைய பெற்றோருக்கு அறிவுரை கூறி 'கனவுகளைத் துரத்துவதை' நிறுத்திப் பெற்றோர்கள், மாணவரின் சுய கவுரவத்தைச் சிதைக்காமலிருக்குமாறு கூறவேண்டும். ஆசிரியர் ஒரு கையாகவும், பெற்றோர் ஒரு கையாகவும் இருந்து மாணவனின் விழிநீரைத்துடைப்பீராக என்பதுதான் நம் தேசப்பிதாவின் வேண்டுகோள்.

## முடிவுரை:

கற்பித்தல் என்பது பொதுவானது. வரம்புகள், சட்டங்கள், பிரிவுகள், அமைப்புகள் எவ்வளவு மாறுபட்டிருப்பினும் கற்றல்,

கற்பித்தலில் எல்லாமும் எல்லோருக்கும் சாத்தியமே. எனவே ஆசிரியர், கல்வி என்பது வாழ்க்கையின் (Life long) அளவு நெடியது, வாழ்க்கையைப் போன்றது என்பதை உணர்ந்து தெளிவாகச் செயல்பட வேண்டும். தொடக்கப்பள்ளிக் கல்வியே முழுமையான வாழ்க்கை நெறிமுறைக்குத் துணையாக இருக்கும். 'செஸ்டர் ஃபீல்டு' என்ற அறிஞரின் கூற்றுப்படி, "ஒவ்வொரு செயலின் முழுமையையும் எதிர்நோக்குங்கள். ஒவ்வொரு தடவையும் முழுமையை நெருங்கத் தொடர்ந்து முயலுங்கள். சோம்பேறித்தனமும் கட்டுப்பாடற்ற போக்கும் உங்கள் முயற்சியைப் பாழ்படுத்திவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள். இல்லையெனில் மாசற்ற ஆசிரியப்பணி என்பது கனவாகிவிடும்."

# இரங்கல்

*மதுரை செந்தமிழ்க் கல்லூரியின் முன்னாள் முதல்வரும் நாடறிந்த நல்ல பட்டிமன்றப் பேச்சாளரும் பண்பாளருமாகிய பேராசிரியர் கு.துரைராசு எம்.ஏ.,எம்.ஃபில்., அவர்கள் 3.3.2002ல் இயற்கை எய்தினார்கள். அவரின் மறைவு மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய அவர் அறுநூறுக்கும் மேற்பட்ட அரிய நூல்களைத் தமிழ்ச்சங்க நூலகத்திற்கு வழங்கியவர். செந்தமிழ் இதழின் ஆசிரியர் குழுவில் உறுப்பினராக இருந்துள்ளார். அவரைப் பிரிந்து வாடும் அன்னாரின் குடும்பத்திற்கு மதுரைத் தமிழ்ச் சங்கம் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.*

ஆசிரியர்.

# ஷேக்ஸ்பியரின் சில துன்பியல் நாடகங்களில் வள்ளுவரின் அறநெறிக் கருத்துக்கள்.

பா. சூரியநாராயணன்.

## முன்னுரை :

மனிதரின் நல்வாழ்விற்கு இன்றியமையாது வேண்டப்படுவன நற்கருத்துக்களே ஆகும். வாழ்க்கைக்கு உகந்த நற்கருத்துக்களைக் கூறும் நூல்களே உயர்தர இலக்கியங்கள் (Classics or Standard Work) என்று ஆங்கில இலக்கியத் திறனாய்வாளர்கள் வகைப்படுத்துவர். இவை எக்காலத்தும் அழியாப்புகழ்பெற்று யாராலும் போற்றப்படும். இவ்வகையைச் சேர்ந்தவையே ஆங்கில நாடகாசிரியர் வில்லியம் ஷேக்ஸ்பியரின் (வாழ்ந்த காலம் கி.பி. 1564-1616) துன்பியல் நாடகங்களும், தமிழில் திருவள்ளுவரின் குறள்நூலும் ஆகும். ஷேக்ஸ்பியரின் துன்பியல் நாடகப் பாத்திரங்களெல்லாம் (Tragic characters) தங்களுடைய நடிப்பின் வாயிலாகப் பல்வேறு மனிதப்பண்புகளை - அன்பு, நாண், ஒப்புரவு, இரக்கம், மானம் இன்னபிற நற்பண்புகளையும் சூது, கொடுங்கோன்மை, கயமை ஆகிய தீயபண்புகளையும் பல்வேறு நிகழ்ச்சிகளின் வாயிலாகப் படம்பிடித்துக் காட்டுகின்றன. அவை கால வெள்ளத்தால் அழியாதவை, அவை எக்கால, எந்த நாட்டு மனிதனிடத்தும் நல்ல, தீய பண்புகளின் வடிவங்களே. ஆகையால் அவை அழியாத பெருமை உடைய உயர்தர நூல்களெனப்படுகின்றன. வள்ளுவர் இத்தகைய பண்புகளை எல்லாம் நாடகப் பாத்திரங்களின் வாயிலாக எடுத்துக்காட்டாமல், குறுகிய செய்யுள் வடிவில் அமைத்துக் காட்டினாலும், அவை எக்காலத்தவராலும் படித்தறியத்தக்கவை. ஆகையால் அவருடைய கருத்துப் படிவங்களுக்கு ஷேக்ஸ்பியரின்

நாடகப்படைப்புகளுக்கு ஒத்த மதிப்பு உண்டு என்று நாம் துணிந்து கூறலாம். ஷேக்ஸ்பியரின் திறமை முதிர்ச்சிக் காலத்தில் தோன்றிய சில துன்பியல் நாடகங்கள் :-

லீயர் மன்னன் (King Lear)
ஒதெல்லோ (Othello)
மாக்பெத் (Macbeth)
ஹேம்லெட் (Hamlet)

ஆகியவை. இவற்றில் வரும் நாடகப் பாத்திரங்கள் எடுத்துக்காட்டும் மனிதப்பண்புகளையும், உணர்ச்சிகளையும் வள்ளுவர் கூறும் பண்புகளுடன் ஒப்பிட்டுக்காணுதல் அறிவுக்கு விருந்தாகும். சிறந்த ஆங்கில இலக்கியத்திறனாய்வாளர் டாக்டர் சாமுவல் ஜான்சன் (Dr.Samual Johnson) என்பார், "ஷேக்ஸ்பியரின் நாடகப் பாத்திரங்களெல்லாம் மனிதப் பண்புகளைப் படம்பிடித்துக்காட்டும் கண்ணாடிகள் ஆவர்" என்று கூறுவார்.

## லீயர் மன்னன் என்ற நாடகத்தின் கதைச்சுருக்கம்[1]

பிரிட்டன் நாட்டின் அரசன் லீயர் என்பானுக்கு கானரில், ரீகன், கார்டீலியா என மூன்று பெண்கள் இருந்தனர். கானரில் ஆல்பனி கோமகனையும், ரீகன் கார்ன்வால் கோமகனையும் மணம் செய்திருந்தனர். இளையவளான கார்டீலியா கன்னியாவள். அவளைத்திருமணம் செய்ய விரும்பியவர் பிரஞ்சு அரசன் ஒருவரும், பர்கண்டி பிரபுவும் ஆவர். இந்த நோக்கத்துடன் அவர்கள் லீயரின் அவைக்களத்தில் தங்கி இருந்தனர். எண்பதாண்டு முதிர்ந்த லீயர் தன்னால் மேலும் ஆட்சிப்பணிகளைச் சரிவரச் செய்யவியலாது என்று உணர்ந்து, நாட்டைத் தன் பெண்களிடத்துப் பிரித்துக் கொடுக்க எண்ணி,

1. இங்குத்தரப்படும் கதைச்சுருக்கம் சார்ல்ஸ் லாம்ப் என்பவரின் ஆங்கில உரைநடையின் மொழிபெயர்ப்பு ஆகும்.

அவர்கள் ஒவ்வொருவரையும் அழைத்து யார் தன்னை மிகுதியும் நேசிக்கிறாரென்றறிந்து அதற்குத்தக, நாட்டை அவர்களுக்குப் பிரித்து வழங்கத் தீர்மானித்தான். அதன்படி முதலில் வந்த கானரில், தான் அவனைச் சொற்களால் வெளியிட இயலாத அளவுக்கு நேசிப்பதாகவும், அவன் அவளுக்குக் கண்ணொளி போன்றவனென்றும், தன் சுதந்திர உரிமையையும் விட உயர்வாக அவனை நேசிப்பதாகவும் கூறி அளந்து விட்டாள். அவளுடைய சொற்கள் அவளுடைய உள்ளத்தைக் காட்டுவன என்று அவன் நம்பி அவளுக்கும் கணவனுக்கும் தனது பெரிய நாட்டின் மூன்றிலொரு பங்கை அளித்துவிட்டான். இரண்டாமவள் வந்தாள்; பொய்புகலுவதில் தான் மூத்தவளுக்குச் சற்றும் இளைத்தவளல்லள் என்று காட்டிக்கொண்டாள்; தனது தந்தையிடத்துத் தனக்கு உள்ள மற்றெல்லா உவகைகளையும்விட மிகவும் உயர்ந்தது என்று கூறினாள்; மகிழ்ச்சியடைந்த மன்னன் இவளுக்கும் நாட்டின் மூன்றிலொருபங்கை அளித்தான். பின்னர்தான் அன்புக்குரிய இளையமகள் கார்டீலியாவை அழைத்து அவளுக்குத் தன் மீதுள்ள அன்பைப்பற்றி வினவினான். அவளும் தமக்கையரைப்போல் தன் மனதுக்கு மகிழ்ச்சிதரும்படி பேசுவாளென்று எதிர்பார்த்தான். ஆனாள் அவளோ அவர்கள் கூறிய புகழ்மொழிகள் எல்லாம் உண்மையல்ல என்றும், அவர்களுடைய உண்மையான நோக்கம் முதிய மன்னனை நாட்டைவிட்டு ஓட்டி, தாங்களே ஆளுதல் வேண்டுமென்ற வஞ்சக எண்ணமுடையவர்களென் பதையும் நன்கு அறிந்தவளாகையால், தன் தகப்பனுக்கு ஒரு மகள் எவ்வளவு அன்பு செலுத்துதல் வேண்டுமென்ற கடமை இருக்கிறதோ அந்த அளவுக்குச் சிறிதும் மிகாமலும் குறையாமலும் நேசிப்பதாகத் தகப்பனிடம் கூறினாள். புகழ்ச்சியை எதிர்பார்த்தமன்னன் இந்த மறுமொழியால் அதிர்ச்சியடைந்தான்; எனவே அவளிடம் அவள் கூறியவற்றை ஆராயும்படியும், இல்லாவிடில் அவளுக்குக் கிடைக்கும்

செல்வம் அல்லது நாட்டின் பங்கு பாதிக்கப்படும் என்றும் கூறினான். ஆனால் கார்டீலியா மறுமொழியாகப் பணிவுடனும், உறுதியாகவும், தந்தையைநோக்கி, "நீங்கள் என்னுடைய தந்தை; நீங்கள் என்னைப் பெற்று வளர்த்தீர்கள், நேசித்தீர்கள். இவ்வாறு நீங்கள் எனக்கு ஆற்றிய தொண்டையும், கடமையையும் நான் உங்கட்குத் திரும்பச் செலுத்துகிறேன்; ஆனால் என் தமக்கையரைப்போல், பெரிய பகட்டான பேச்சுக்களைப் பேசவோ அவர்களைப்போலத் தகப்பனைத்தவிர உலகில் வேறெதையும் நேசிக்கவில்லை என்று பொய்யான வாக்குறுதியைக்கூறவோ இயலாது, அவர்கள் சொல்லியதுபோல், தகப்பனைத்தவிர வேறு எதையும் விரும்பவில்லை எனில், அவர்களுக்குக் கணவர்கள் இருப்பது ஏன்? நான் திருமணம் செய்துகொண்டால், என் கணவருக்கு என் அன்பில் பாதியையும் பராமரிப்பிலும், கடமையிலும் பாதியையும் அளிப்பேன் என்பது உறுதி. தமக்கையரைப்போலத் தகப்பனைமட்டுமே நேசிப்பவளாக இருந்தால், நான் திருமணமே செய்து கொள்ளமாட்டேன்" என்று உண்மையைச் சொன்னாள். உண்மையில் தமக்கையரைப்போல கார்டீலியா தன் தந்தையை மிகவும் நேசிப்பவள்தான்; மேலும் அவள் இவ்வாறே எந்த நேரத்திலும் தகப்பனிடம் சொல்லியிருப்பாள்; ஆனால் தமக்கைகளின் போலியான புகழ்மொழிகள் அவர்களுக்கு மிகப்பெரிய பரிசுகளை அளித்ததைப் பார்த்தபின்னர், அவள் தன் தகப்பனை நேசித்துவிட்டு, அமைதியாக இருப்பதே சரி என்று எண்ணினாள். இத்தகைய மனப்பாங்கு அவளுக்குத் தகப்பன்மீதுள்ள அன்பு ஊதிய நோக்கத்தில் எழுந்தது அன்று என்றும், அது தூய்மையான, உண்மையான அன்பு என்றும் எடுத்துக்காட்டிற்று.

ஆனால் கார்டீலியாவின் களங்கமற்ற இந்த மறுமொழியை முதிய மன்னன் லீயர் ஆணவமான பேச்சு என்று தவறாக எண்ணி, அவள் மீது சினம் மிக்கவனாய் அவளுக்காக

ஒதுக்கிவைத்த மூன்றாவது பங்கு நாட்டை மூத்த இரு பெண்களுக்கும் கணவர்களுக்கும் சமமாகப்பிரித்துக் கொடுத்துவிட்டான். பின் தன் அவைக்களத்தார் யாவரையும் அழைத்து அவர்கள் முன்னிலையில் மூத்த பெண்களின் கணவர்களிடத்துக் கூட்டாகத் தன் மணிமுடியையும், அதிகாரங்களையும், வருமானத்தையும், அரசாங்க நிர் வாகத்தையும் ஒப்படைத்தான், தனக்கு அரசன் என்ற பட்டத்தையும், தனக்கு மெய்க்காவலர்களாக 100 வீரர்களையும் மட்டும் வைத்துக்கொண்டு, ஏனை அரச அதிகாரங்களை நீத்துவிட்டான். மூத்தவர்கள் இருவரும் ஒவ்வொருமாதமும் அவனை முறைவைத்துத் தங்களுடைய அரண்மனையில் அவனைப் பாதுகாத்தல் வேண்டும்.

பகுத்தறிவுக்குச் சிறிதும் பொருந்தாதவாறு அரசன் செய்த ஏற்பாட்டைக் கேட்ட அவைக்களத்தார் யாவரும், பெரும் அதிர்ச்சியும், வருத்தமும் உற்றனர். இந்த ஏற்பாடு உணர்ச்சி வயத்தில் செய்யப்பட்டது, அறிவுக்கேற்பச் செய்யப்படவில்லை என்பதை யாவரும் உணர்ந்தனரெனினும், அவர்களுள் கென்ட் பிரபுவைத்தவிர (Earl of Kent) வேறெவரும் சீற்றம்மிக்க அரசனிடம் உண்மை கூறத் துணியவில்லை. கென்ட்பிரபு கார்டீலியாவின் நற்பண்பைப்பற்றி அரசனிடம் சில சொல்லவும், அரசன் சீறி, பேச்சை நிறுத்தும்டியும், இல்லாவிடில் அவனைக் கொன்றுவிடுவதாகவும் அச்சுறுத்தினான். ஆனால் உண்மை ஊழியனான கென்டை விரட்ட இயலவில்லை. ஏனெனில் அவன் லீயரிடம் எப்போதும் பற்றுறுதியுடன் இருந்து, அவனுக்கு மதிப்புக்கொடுத்து, தகப்பனைப்போல் அன்புசெலுத்தி, அவனுடைய பகைவர்களுக்கெதிராகத் தன் உயிரையும் பணயமாக வைத்துக் காப்பாற்ற ஆயத்தமாக இருப்பான். கடந்தகாலத்தில் பல சிக்கலான கேள்விகளில் அரசனுக்கு அறிவுரைகூறி அதை அவன் ஏற்றுள்ளான். இப்பொழுது லீயர்

தனக்குத்தானே எதிரியாக இருந்ததனால், கென்ட் அவனுக்கு நல்லுதவி செய்ததற்காக அவனைத்துணிவுடன் எதிர்த்துநின்று, தன் அறிவுரையை அரசன் ஏற்றுக்கொள்வானென்றும், கார்டீலியாவை அவன் தவறாக மதிப்பிட்டதை உணர்வானென்றும் உறுதியாக நம்பி, அவன் செய்த பங்கீடு தவறானது என்று எடுத்துச் சொன்னான். இவனுடைய நல்ல அறிவுரையை அரசன் ஏற்றுக்கொள்ளாமல், அவனை 5 நாட்களுக்கு நாட்டைவிட்டு நீக்குமாறும், இல்லாவிடில் கொல்லப்படுவானென்றும் கூறி ஆணைவிடுத்தான். கென்ட் அரசனிடம் விடைபெற்றுக்கொண்டு, உண்மையையும், நெறியையும் எடுத்துக்கூறிய கார்டீலியாவைக் காப்பாற்றுமாறு கடவுளரை வேண்டிக்கொண்டு வேற்றுநாட்டிற்குச் சென்றான்.

பின்னர் லீயர் பிரஞ்சு அரசனையும், பர்கண்டி பிரபுவையும் அழைத்து, தான் கார்டீலியாவுக்கு அளித்த தண்டனையைக்கூறி, அந்நிலையிலும் அவர்கள் அவளை விரும்புகின்றனரா என்று வினவினான். பர்கண்டிபிரபு நாடிழந்த கார்டீலியாவை ஏற்றுக்கொள்ள மறுத்தான்; ஆனால் பிரஞ்சு அரசன் அவள் தவறு ஒன்றும் செய்யவில்லை என்ற உண்மையை உணர்ந்தான்; அவள் தட்டுத்தடுமாறித் தன் உண்மைக்கருத்தைத் தகப்பனிடம் கூறியதுதான் அவள் செய்த தவறு. பிரஞ்சு அரசன் கார்டீலியாவின் கரம்பற்றித்திருமணம் செய்து, அவளுடைய நற்பண்புகளே அவளுக்குக்கிடைக்க வேண்டிய நாட்டின் பங்கைவிட மிக உயர்ந்த சீதனமாகும் என்று கூறி, கார்டீலியாவை அவள் தகப்பனாரிடமும், தமக்கை மாரிடமும் விடைபெற்றுக்கொண்டு தன்னுடன் வந்து அழகிய பிரான்சு நாட்டின் அரசியாகத் தன்னுடன் இருக்குமாறும்கூறி அழைத்துச் சென்றான். மேலும் அவன் பர்கண்டி பிரபுக்குக் கார்டீலியாமீது உள்ள காதல் தண்ணீர் போல நிலையில்லாமல் ஓடி மறைந்துவிட்டதென்று கூறி இகழ்ந்தான்.

கார்டீலியா அழுத கண்களுடன் தமைக்கைமாரிடம் தகப்பனாரை நன்கு பேணுமாறு கூறி விடைபெற்றாள். அவர்களோ அவள் ஏதும் தங்களுக்குச் சொல்லவேண்டு வதில்லை என்றும் தாங்கள் கடமை உணர்வு உடையவர்க ளென்றும், அவளுக்கு ஏதோ நல்லகாலமாகக்கிடைத்த கணவனிடத்து உண்மையுடன் இருக்குமாறும் இகழ்ந்துரைத்தனர். கார்டீலியா தமக்கையருடைய சூழ்ச்சியை நன்கு அறிந்தவளாதலின், தன் தகப்பனார் காப்பாற்றப்படுதல் வேண்டு மென்று இறைவனை வேண்டிக்கொண்டு அகன்று விட்டாள்.

## மூத்த பெண்களின் சூழ்ச்சிகளும். லீயர் பட்ட பெருந்துன்பங்களும்:

கார்டீலியா தமக்கையரைவிட்டு நீங்கினாளோ, இல்லையோ, அவர்களுடைய பேய்க்குணங்கள் தலையெடுக்க லாயின. முதல் மாதத்தில் லீயர் முந்தைய ஏற்பாட்டின்படி மூத்த மகள் கானரில்லுடன் தங்கினான். ஆனால் அது முடியுமுன்னரே அவளுடைய சொல்லுக்கும் செயலுக்குமிடையே வேறுபாடிருப் பதை லீயர் உணர்ந்தான். லீயரிடம் அரசனுக்குரிய சில சிறு சின்னங்களும், 100 மெய்க்காவலரையும் அவள் வெறுத்தாள்; அவனை அவள் சினத்தோடு பார்த்தாள்; அவளுடன் பேச விரும்பினால், தான் உடல்நலமின்றி இருப்பதாக நடித்தும், அவனுடைய முதுமையை ஒரு விரும்பத்தகாத சுமை என்று கருதி அவனை ஒதுக்கியும், தனது பணியாட்களும் அவனைப் புறக்கணிக்குமாறு அவர்களுக்குத் தனியாக ஆணையும் விடுத்தாள். இவற்றை எல்லாம் லீயர் இயன்றவரை பொறுத்துக் கொண்டான். பொதுவாக எவரும் தமது தவறுகளினால் தமக்குத் துன்பமான விளைவுகள் ஏற்படுகின்றன என்பதை ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.

கென்ட்பிரபு லீயரால் நாடுகடத்தப்பட்ட போதிலும், அவன் தனது தலைவனாகிய அரசனுக்கு உதவி செய்வதற்கு வாய்ப்பு வரும்வரை எல்லா விளைவுகளையும் ஏற்றுக்கொண்டு பிரிட்டனிலேயே தங்கியிருக்கத் தீர்மானித்தான். இத்தகைய பற்றுறுதியின் காரணமாகச் சிலசமயங்களில் அவன் தன்னைத் தரம் தாழ்ந்தசெயல்களுக்கும், உருமாற்றத்துக்கும் தன்னை ஆட்படுத்திக் கொண்டான்; அதற்காக அவன் வருந்தவில்லை. தான் அரசனுக்கு உதவிசெய்யக் கடமைப்பட்டிருந்ததை நன்கு உணர்ந்திருந்தான். அவன் பிரபுவுக்குரிய ஆடம்பரங்களை ஒதுக்கிவிட்டுத் தன்னை வேலைதேடி அலையும் ஒரு பணியாள் போல மாற்றிக்கொண்டு, அரசனிடத்து வந்து அவனுக்குப் பணி செய்ய முன்வந்தான். அவனுடைய எளிய தோற்றமும் கரவில்லாத பேச்சும் அரசனை ஈர்த்தன. அவன் அரசனுடைய அன்புக்குரிய கென்ட் பிரபு என்று அரசன் அறியான். இவன் தன் பெயரை கேயஸ் என்று மாற்றிக்கொண்டிருந்ததனால், அரசனும் அவனை அந்தப்பெயரிலேயே தனது பணியாளனாக அமர்த்தினான். இவன் தனது பற்றுறுதியைத் தன் தலைவனுக்கு எடுத்துக் காட்டுதற்கு ஒரு வாய்ப்பும் வந்தது. இவன் வேலைக்குச் சேர்ந்த அன்றே, கானரில் இரகசியமாக விடுத்த ஆணையின் பேரில் அவளுடைய பணியாளன் ஒருவன் அரசனை மதிக்காமல் துடுக்காகப் பார்க்கவும் பேசவும் செய்தான். இத்தகைய இழிவான செயலைப் பொறுத்துக் கொள்ளாத கேயஸ், அந்த இழிந்த பணியாளனைப் பற்றி அவனை நாயடைக்கும் பட்டியில் போட்டுவிட்டான். இதனால் கேயசுடன் லீயர் இணக்கமாகப் பழகினான். கென்டைத்தவிர லீயரிடத்துத் தன்நிலைக்கு ஏற்ற அன்பு செலுத்தக்கூடிய வேறொரு நண்பனும் இருந்தான். அவனே அரசவைக் கோமாளி (Court Jester). லீயருக்கு அரண்மனை இருந்தபோது அதில் இவனும் இருந்தான். இப்போது லீயர் முடியை நீத்துவிட்ட நிலையிலும், இவன் லீயரை விட்டுப்பிரியாமல் இருந்தான். இவன்

தனது பழைய நல்ல நகைச்சுவை உரைகளைக் கூறியும், அதேசமயம் அரசன் தீர ஆராயாமல் எல்லாவற்றையும் தன் 2 பெண்களுக்கு அளித்துவிட்ட செயலை ஏளனம் செய்தும் கூறினான். மேலும் அவன் கானரில் முன்னிலையிலேயே அரசனுடைய இரண்டு பெண்களும் எவ்வாறு அவனிடத்துச் சிறிதும் நன்றி இல்லாமல் நடந்துகொள்ளுகின்றனரென்றும், இதனால் லீயர் முன்போல் இல்லாமல் லீயரின் நிழலாகவே இருக்கிறான் என்றும் கூறவே, சினம் மிக்க கானரில் கோமாளிக்குக் கசையடி கொடுப்பதாக அச்சுறுத்தினாள். மேலும், லீயரின் 100 மதிப்புமிக்க சிறந்த, கடமை உணர்ச்சிமிக்க வீர்களால் அவளுக்குச் செலவுமிகுதியும் ஏற்படுகிறது என்றும், அதனால் கலகம் ஏற்படுகிறது என்றும் பொய்யான குற்றச்சாட்டுக்களை கானரில் கூறி, லீயரின் மனதைப் புண்படுத்தினாள். இதனால் அதிர்ச்சியடைந்த லீயர் கானரிலை சீற்றத்துடன் ஒரு வெறுக்கப்பட்ட பருந்து என்றும், அவளுக்கு குழந்தையே பிறக்காது என்றும், பிறந்தாலும் அவள் எப்படி அவனிடத்து வெறுப்பைக்காட்டுகிறாளோ, அதேபோல் அதுவும் அவனிடத்து வெறுப்பைக் காட்டக்கடவது என்றும் சாபமிட்டான். பாம்பின் நச்சுப்பல்லைவிட நன்றி கெட்ட ஒரு குழந்தையின் தீயபண்பு எவ்வாறு கொடியதென்பதை அவளும் உணரக்கடவள் என்றான். அவளுடைய கணவன் ஆல்பனிபிரபு மனைவியின் இரக்கமற்ற நடத்தைக்குத் தானும் ஒரு காரணம் என்று லீயர் எண்ணுதல் கூடாதென்று சொல்லிப்பார்த்தான். லீயர் எதனையும் ஏற்றுக்கொள்ளாமல், தனது குதிரைகளையும், 100 வீரர்களையும் அழைத்துக்கொண்டு, இரண்டாவது மகள் ரீகனுடைய இருப்பிடத்துக்குச் சென்றான்.

- தொடரும்.....

அன்பு அச்சகம், மதுரை-1. ✆ 341116